முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1678

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.05.2024**, வெள்ளிக்கிழமை

1. தர்மராஜனே ஆறுமுக அரங்கனே
   தவபலமிக்க ஞான தேசிகனே
   குருராஜனாய் இந்த உலகுக்கு அற்புதம் நிகழ்த்த
   குடிலமைத்து அருளுகின்ற எந்தன் அவதாரனே
2. அவதார ஞானியே அரங்கனே
   அப்பனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அவனியில் ஞான அறிவுரை ஆசி
   (குரோதி வருடம் சித்திரை மாதம் 20 ம் நாள், 03.05.2024, வெள்ளிக்கிழமை)
   அரங்கன் சக்தி பெருக எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கனுக்கு நித்தம்நித்தம்
   உயர் ஆற்றல் ஆறுமுகன் யான் தந்தருள
   குறைவின்றி அரங்கனுக்கு ஆற்றல்கூடும்
   குவலயத்தில் அரங்கன் படை இன்னும் பெருகும்
4. பெருகவே சைவ நெறிகொண்டு
   பேருலகை மாற்றும் ஒரே ஞானி
   ஆறுமுகப்பெருமான் என் வடிவான அரங்கனாய் இருக்க
   அகிலத்தில் அன்பர்கள் அரங்கனைத் தேடி வந்து
5. ஆற்றல்பட தீட்சை ஏற்று அறம் தர்ம நெறிமுறை பின்பற்றினால்
   மாற்றம் வள்ளலாக மாதவசி அரங்கனாக
   தேற்றம் கூடி இந்த கலியுகத்தில்
   தெரிவிப்பேன் அரங்கன் வழி ஞானிகளாக மாறி
6. மாறியே உலகமாற்றத்தை
   மாதவசி அரங்கன் நோக்கமாக
   பேருலகில் நடத்தி அரங்கன் தொண்டர்களெல்லாம்
   பிசகின்றி ஞான ஆட்சி படைக்க நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–